மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்



மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 300	உள்ளூர் - 29.10.2026	வியாழக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 300	வெளியூர் - 30.10.2026	வெள்ளிக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

நவம்பர் மாத ராசிபலன்கள்! | **இஸ்ரோவில் 96 காலியிடங்கள்!** | **கே.என்.நேரு வீட்டில் சோதனை?** | **அதிமுக, பாமக-விற்கு மத்திய அமைச்சர் பதவி?**

ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதலுக்கு தயாராகும் அமெரிக்கா?

வாஷிங்டன், அக். 29–

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்கனவே போதுமான அமெரிக்க படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளதால், புதிய தாக்குதல்களை விரைவாகத் தொடங்க முடியும் என்று கூறப்படுகிறது. இருப்பினும், ஈரான் மீது மீண்டும் தாக்குதல் நடத்துவது குறித்து டிரம்ப் இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை. ஈரானின் ரேடார்கள், ஏவுகணை ஏவுதளங்கள் உள்ளிட்ட ராணுவ இலக்குகள் மீது மட்டும் தாக்குதல் நடத்தாமல், அந்நாட்டின் எரிசக்தி கட்டமைப்புகள் மற்றும் அணுசக்தி நிலையங்களையும் குறிவைக்கும் வகையில் அமெரிக்க ராணுவம் விரிவான திட்டங்களைத் தயாரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் இடைக்காலத் தேர்தல் முடிந்த பிறகு, ஈரான் மீதான புதிய தாக்குதல்களுக்கு டிரம்ப் ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரத்தில் அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதல் நடத்தினால், ஈரானும் ஹவுதி கிளர்ச்சிப் படையினரும் பதிலடி கொடுக்க தயாராகி வருவதாக அமெரிக்க உளவுத்துறையும் கூறியுள்ளது. மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க தளங்கள் மட்டுமின்றி, அதற்கு அப்பாலும் தாக்குதல்கள் விரிவடைய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால், மேற்காசியாவில் மீண்டும் உச்ச கட்ட பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் கடந்த பிப்ரவரி மாத இறுதியில் போர் வெடித்தது. ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சிப்பதாக கூறி அந்த நாட்டின் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதலை தொடுத்தன. ஆனால் 8 மாதங்கள் ஆகியும் இந்த போர் முடிந்தபாடில்லை. ஈரான் அமெரிக்கா போர் நீடித்து வரும் நிலையில், கடந்த சில வாரங்களாக தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்படாமல் உள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலில் தேர்தல் நடந்து வருவதாலும் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படுவதற்கான முயற்சிகள் நடப்பதாலும் பெரிய அளவில் தாக்குதல் நடத்தப்படவில்லை என்று சர்வதேச நோக்கர்களால் கூறப்படுகிறது. இதற்கு மத்தியில்தான் இடைக்கால தேர்தலுக்கு பிறகு தாக்குதல் நடத்தப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

முத்துராமலிங்க தேவர் குருபூஜை விழா: துணை ஜனாதிபதி, அரசியல் கட்சியினர் பசும்பொன்னில் மரியாதை!

சென்னை, அக். 29–

தமிழக கவர்னர் அர்லேகர், அரசு சார்பில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், த.வெ.க. நிர்வாகிகள் கலந்து கொண்டு முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மரியாதை செலுத்த இருக்கிறார்கள்.

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் 119–வது ஜெயந்தி மற்றும் 64–வது குருபூஜை விழா நேற்று பசும்பொன்னில் தேவர் நினைவாலய பொறுப்பாளர் காந்தி மீனாள் நடராஜன் தலைமையில் யாக வேள்வியுடன் தொடங்கியது.

பொதுமக்கள் ஏராளமானோர் பால்குடம், ஜோதி, முளைப்பாரி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர். 2–ம் நாளான இன்று அரசியல் விழாவாக நடைபெற்றது. இதில் தேவரின் அரசியல் பயணம் குறித்து சொற்பொழிவாளர்கள் பேசுகிறார்கள்.

நிறைவு நாளான (30–ந்தேதி) குருபூஜை விழாவாக நடைபெறுகிறது. இதையொட்டி அவரது நினைவிடம் அமைந்துள்ள ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்த இருக்கிறார்கள். இதற்காக பல்வேறு முன்னேற்பாடுகள் மாவட்ட நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

துணை ஜனாதிபதி

இந்தியாவின் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் நாளை தேவர் ஜெயந்தி விழாவில் கலந்துகொண்டு முத்துராமலிங்க தேவருக்கு மரியாதை செலுத்துகிறார். இதற்காக நாளை காலை 8.50 மணிக்கு விமானம் மூலம் மதுரை வருகை தரும் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், அங்கிருந்து ஹெலிகாப்டரில் பசும்பொன் செல்கிறார். காலை 9.30 மணி முதல் 10 மணி வரை தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்கிறார். தொடர்ந்து அதே ஹெலிகாப்டரில் காலை 10.20 மணிக்கு புறப்படும் அவர் திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராம பல்கலைக்கழகத்துக்கு 11.10 மணிக்கு செல்கிறார். அங்கு நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு விட்டு மதுரை வருகை தரும் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன், அழகர்கோவில் சாலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு மாலை 4 மணிக்கு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார்.

பின்னர் மாலை 5 மணிக்கு மதுரை விமான நிலையத்தில் இருந்து டெல்லி புறப்படுகிறார். இதேபோல் தமிழக கவர்னர் அர்லேகர், அரசு சார்பில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், த.வெ.க. நிர்வாகிகள் கலந்துகொண்டு முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மரியாதை செலுத்த இருக்கிறார்கள்.

மு.க.ஸ்டாலின்–எடப்பாடி பழனிசாமி

இதேபோல் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜையை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் உள்ள அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானத்தில் மதுரை வருகிறார்.

(30–ந்தேதி) காலை 8 மணிக்கு மதுரை கோரிப்பாளையத்தில் உள்ள முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். பின்னர் தெப்பக்குளத்தில் உள்ள மருது சகோதரர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

நினைவிடத்தில் அஞ்சலி

பின்பு அங்கிருந்து காரில் புறப்பட்டு ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் செல்லும் மு.க. ஸ்டாலின் முத்துராமலிங்கத்தேவரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துகிறார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகின்றனர்.

இதேபோல் அ.தி.மு.க. சார்பில் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி., ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சசிகலா, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர், அமைப்புகளை சேர்ந்தவர்கள் தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்துகிறார்கள்.

அரசியல் கட்சி

அரசியல் கட்சி மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்த நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு முன்னேற்பாடுகளை கருத்தில் கொண்டு மதுரை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும், மதுரை முதல் ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை பகுதியிலும், டிரோன்கள் பறக்க தடை விதித்து மதுரை, ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர்கள் உத்தரவிட்டுள்ளனர். துணை ஜனாதிபதி உள்ளிட்டோர் வருகையை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் 7 டி.ஐ.ஜி.க் கள், 40 எஸ்.பி.க்கள் தலைமையில் 18 ஆயிரம் போலீ சார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள்.

முதல்வர் விஜய் தலைமையில் அமைச்சரவை கூட்டம்!

சென்னை, அக். 29–

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவை கூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில், தமிழ்நாட்டில் புதிதாக தொழில் தொடங்க உள்ள நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான முன்மொழிவுகள், விரிவாக்கம் செய்யப்பட உள்ள நிறுவனங்களுக்கு அனுமதி உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மின்தடை விவகாரம் பெரிதாக உள்ளதால் பேட்டரி எரிசக்தி சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் முக்கிய முடிவுகள், அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள், தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் துறைவாரியான இலக்குகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு நிலவரம் தொடர்பாகவும் வருவாய்த் துறை சார்பாக ஏழை மக்களுக்கு பட்டா வழங்குவது, சமூக நீதி கணக்கெடுப்பு உள்ளிட்டவை குறித்தும் பேசப்படும் என்று தெரிகிறது. இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் 6 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு கடந்த மே 10–ஆம் தேதி பொறுப்பேற்ற பிறகு தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்ட மொத்தம் 436 திட்டங்கள் பல்வேறு துறைகள் சார்பில் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டன. அதன்பிறகு ஜூலை 16–ஆம் தேதி 2–ஆவது அமைச்சரவைக் கூட்டம் பட்ஜெட் கூட்டத் தொடர் தொடர்பாக நடைபெற்றது. முதல்வர் விஜய்யின் லண்டன் பயணத்துக்குப் பிறகு இப்போது 3 ஆவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் முதலீட்டு புரட்சி!

ரூ.1.14 லட்சம் கோடி முதலீடுகள்! நவம்பரில் மெகா தொழில் மாநாடு!

தொழில் வளர்ச்சிக்கு விஜய் அதிரடி வியூகம்!!

சென்னை, அக் .29–

தமிழகத்தில் தொழில் முதலீடுகளை அதிகரிக்கவும், ஏற்கனவே பெறப்பட்ட முதலீட்டு உறுதிமொழிகளை செயல்பாட்டுத் திட்டங்களாக மாற்றவும், நவம்பர் மாதத்தில் பிரம்மாண்ட முதலீட்டு மாநாட்டை நடத்த முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை 112 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.1.14 லட்சம் கோடி முதலீட்டு உறுதிமொழிகள் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் வகையில், நவம்பரில் 'முதலீட்டு செயலாக்க மாநாடு' நடைபெற உள்ளது.

முதலமைச்சர் விஜய் தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், தொழில் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை இறுதி செய்வது, தொழிற்சாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, புதிய வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா நவம்பர் முதல் வாரத்தில் ஜெர்மனி செல்ல உள்ளார். அங்கு முன்னணி தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழகத்தின் தொழில் வாய்ப்புகள், அரசு சலுகைகள் குறித்து விளக்கவுள்ளார்.

ஏற்கனவே 120–க்கும் மேற்பட்ட ஜெர்மன் நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக ஜெர்மன் நிறுவனங்களின் முதலீடுகளை அதிகம் ஈர்த்த மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

இந்த மாநாடு மூலம் புதிய தொழிற்சாலைகள் உருவாகி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதுடன், தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியும் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4 மாநிலங்களில் பாஜக வெற்றி முழக்கம்! காங்கிரசுக்கு அதிர்ச்சி!!

புதுடெல்லி, அக். 29–

உத்தர பிரதேசம், பிஹார், மகாராஷ்டிரா, கர்நாடகம் ஆகிய 4 மாநிலங்களில் 28 சட்ட மேலவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பாஜக அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளது. முடிவுகள் வெளியான தொகுதிகளில் காங்கிரஸ் ஓரிடத்தில்கூட வெற்றி பெறவில்லை. கர்நாடகத்தில் 4 தொகுதிகளில் பாஜக 3 இடங்களையும், மதச்சார்பற்ற ஜனதா தளம் ஓரிடத்தையும் கைப்பற்றின. உத்தர பிரதேசத்தில் முதற்கட்ட முடிவுகளின்படி பாஜக 4, சமாஜ்வாதி 2 இடங்களில் வென்றன. பிரதமர் மோடியின் வாராணசி தொகுதிக்கு உட்பட்ட மேலவைத் தொகுதியை சமாஜ்வாதி கைப்பற்றியது.

பிஹாரில் பாஜக, ஐக்கிய ஜனதா தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், ஜன் சுராஜ் மற்றும் சுயேச்சை வேட்பாளர் தலா ஓரிடத்தில் வெற்றி பெற்றனர். பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி தனது முதல் மேலவை வெற்றியைப் பதிவு செய்தது.

மகாராஷ்டிராவில் பாஜக 2, ஷிண்டே சிவசேனா 1, சரத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் பிரிவு 2 இடங்களைக் கைப்பற்றின.

நடுவானில் உயிரைக் காத்த இந்திய விமானி! வீரதீரச் செயலுக்கு துபாய் அதிபர் விருது!

துபாய், அக். 29–

நடுவானில் பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய இந்திய விமானி கேப்டன் ஸ்மிட் மச்சார் மற்றும் 'ப்ளை துபாய்' விமான ஊழியர்களின் வீரதீரச் செயலைப் பாராட்டி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யான் விருது வழங்கி கவுரவித்தார். விருது வழங்கும் நிகழ்ச்சியில், விமானியிடம் உடல்நலம் குறித்து அதிபர் விசாரித்தார். குணமடைய இரண்டு மாதங்கள் ஆகும் என விமானி தெரிவித்தார். அதற்கு, குணமடைந்ததும் போர் பயிற்சி அளிக்க விரும்புவதாக அதிபர் நகைச்சுவையாகக் கூறினார்.

இதுவே தனக்குக் கிடைத்த மிகப்பெரிய கவுரவம் என விமானி நெகிழ்ந்தார். விமானியை அதிபர் கட்டியணைத்து, தலையில் ஏற்பட்ட காயங்களைப் பார்வையிட்ட வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

ஜி.எஸ்.எல்.வி. எப்-18 ராக்கெட் அக். 30-ல் விண்ணில் பாய்கிறது!

சென்னை, அக். 29–

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலுள்ள 2–வது ஏவுதளத்தில் இருந்து இன்று இரவு 11.51 மணிக்கு ஜி.எஸ்.எல்.வி.–எப்18 ராக்கெட் விண்ணில் ஏவப்படுகிறது. இதில் வழிகாட்டுதல் சேவைக்காக என்.வி.எஸ்–03 செயற்கைக்கோள் பயணிக்க இருக்கிறது.

ஜி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டுகளுக்கான அதிகாரப்பூர்வ கவுண்ட்டவுன் ஏவுவதற்கு சுமார் 24 அல்லது 26 மணி நேரத்திற்கு முன்பு தொடங்கும். அந்த வகையில், இந்த ராக்கெட்டுக்கான கவுண்ட்டவுன் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) விஞ்ஞானிகள் விண்ணில் உள்ள கண்' என்று அழைக்கும் 'ஈ.ஓ.எஸ்–05' செயற்கைக்கோள், இந்தியாவின் முதல் புவி ஒத்திசைவு பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளாகும். இந்த செயற்கைக்கோள் ஜி.எஸ்.எல்.வி எப்–17 ராக்கெட் மூலம் கடந்த செப்டம்பர் 8–ந்தேதி புவி–ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

தற்போது அங்கிருந்து படங்களை அனுப்பத் தொடங்கியுள்ளது.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் என்ஜினை கொண்ட இந்த ஜி.எஸ்.எல்.வி மார்க்–2 ரக ராக்கெட்டுகள், கடந்த 2021–ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 6 முறை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 29.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 12-ம் தேதி

குழந்தைகளை விழுங்கும் உடல் பருமன்! இந்தியாவின் எதிர்காலத்துக்கு ஆபத்து! உடனடி நடவடிக்கை அவசியம்!!

இந்தியாவின் எதிர்காலச் செல்வங்களான குழந்தைகள் இன்று புதிய சுகாதாரச் சவாலை எதிர்கொண்டுள்ளனர். குழந்தைகளிடையே அதிகரித்து வரும் உடல் பருமன் என்பது வெறும் தோற்றம் சார்ந்த பிரச்னையல்ல. அது அவர்களின் உடல்நலம், மனநலம், கல்வி மற்றும் எதிர்கால வாழ்க்கையையே பாதிக்கக்கூடிய அபாயமாக உருவெடுத்துள்ளது.

ஒருகாலத்தில் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடே இந்தியாவின் மிகப்பெரிய கவலையாக இருந்தது. ஆனால், இன்று ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் உடல் பருமனும் முக்கியப் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. இந்த இரட்டைச் சுமையைச் சமாளிக்க மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உணவுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றமே இதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று. துரித உணவுகள், அதிக சர்க்கரை கொண்ட குளிர்பானங்கள், பதப்படுத்தப்பட்ட தின்பண்டங்கள் ஆகியவை குழந்தைகளின் அன்றாட உணவில் அதிக இடத்தைப் பிடித்துள்ளன. மறுபுறம், கைப்பேசி, தொலைக்காட்சி, இணைய விளையாட்டுகள் காரணமாக உடல் உழைப்பும் விளையாட்டு நேரமும் குறைந்து வருகின்றன.

உடல் பருமன் அதிகரிப்பதால் சிறுவயதிலேயே நீரிழிவு நோய், உயர் ரத்த அழுத்தம், இதயநோய் தொடர்பான ஆபத்துகள் உருவாகக்கூடும். மேலும், உடல் தோற்றம் குறித்த கேலி, தாழ்வு மனப்பான்மை போன்றவை குழந்தைகளின் மனநலத்தையும் பாதிக்கலாம். எனவே, உடல் பருமன் கொண்ட குழந்தைகளைக் குறைகூறாமல், ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு வழிநடத்துவதே சரியான அணுகுமுறையாகும்.

பள்ளிகளில் உடற்கல்வி வகுப்புகள் பெயரளவில் இல்லாமல், தினசரி நடைமுறையாக மாற வேண்டும். குழந்தைகளுக்கு விளையாட்டு மைதானங்கள், சத்தான மதிய உணவு, ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும். பள்ளி வளாகங்களில் அதிக சர்க்கரை, உப்பு மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுப் பொருட்களின் விற்பனையைக் கட்டுப்படுத்துவதும் அவசியம்.

பெற்றோர்களுக்கும் இதில் முக்கியப் பொறுப்பு உள்ளது. குழந்தைகளின் உணவுப் பழக்கம், தூக்க நேரம், உடற்பயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். ஆரோக்கியமான உணவு என்பது வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் ஒன்றாக இருக்கக் கூடாது. அனைத்துக் குடும்பங்களுக்கும் சத்தான உணவு மலிவான விலையில் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

குழந்தைகளின் உடல் பருமன் என்பது தனிப்பட்ட குடும்பத்தின் பிரச்னை மட்டுமல்ல; அது நாட்டின் பொது சுகாதாரப் பிரச்னை. நோய் ஏற்பட்ட பிறகு சிகிச்சை அளிப்பதைவிட, சிறுவயதிலேயே நோய் வராமல் தடுப்பதே சிறந்த முதலீடாகும்.

இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவின் தூண்கள். அந்தத் தூண்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் வலிமையான தேசத்தை உருவாக்க முடியும்.

குழந்தைகளின் கைகளில் கைப்பேசியைத் திணிப்பதை விட, விளையாடப் பந்தைக் கொடுப்போம்! ஆரோக்கியமான குழந்தைகளே வளமான இந்தியாவின் அடித்தளம்!

ஆசிரியர்,
மதுரை மணி நாளிதழ்

உருவானது புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி!



சென்னை, அக். 29–

வங்கக் கடலில் புதிதாக காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் வியாழக்கிழமை காலை தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் கடந்த வாரம் உருவான ஒர்னாப் புயல் ஆந்திர மாநிலம் நர்சாபூர் – காக்கிநாடா இடையே உள்ள ஏனாம் (புதுச்சேரி நிர்வாகத்துக்கு உள்பட்ட பகுதி) அருகே அதி தீவிர புயலாக புதன்கிழமை கரையைக் கடந்தது.

இந்த நிலையில், தெற்கு அந்தமான் மற்றும் அதையொட்டிய வங்கக் கடலில் நிலவிய வளிமண்டல சுழற்சி, இன்று காலை காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும், 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் அடுத்தடுத்து வலுப்பெற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதனால், தமிழ்நாட்டில் வருகின்ற நவ. 1 ஆம் தேதி முதல் மீண்டும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு தீபாவளி பரிசு!

புதுடெல்லி, அக். 29–

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படியை 3 சதவீதம் உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அறிவித்தார்.

இதன்படி அகவிலைப்படி 60 சதவீதத்திலிருந்து 63 சதவீதமாக உயர்கிறது. இதனால் 48 லட்சம் ஊழியர்களும், 68 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயனடைவார்கள்.

ரூ.18,000 அடிப்படைச் சம்பளம் பெறுவோருக்கு மாதம் ரூ.540 கூடுதலாகக் கிடைக்கும். ஜூலை 1 முதல் உயர்வு அமலாகும் என்பதால், மூன்று மாத நிலுவைத் தொகையும் வழங்கப்படும். தீபாவளியை முன்னிட்டு வெளியான இந்த அறிவிப்பு ஊழியர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விஜயின் பிம்பத்தை உடைக்க பா.ஜ., வியூகம்!

சென்னை, அக். 29–

வட மாநிலங்களில் தமிழக முதல்வர் விஜய்க்கு அதிகரித்து வரும் செல்வாக்கை முறியடிக்க பா.ஜ., தேசிய தலைமை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் விஜய் தலைமையிலான த.வெ.க., அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்த வீடியோக்கள் வட மாநிலங்களில் சமூக வலைதளங்களில் அதிகளவில் பரவி வருகின்றன. சிறந்த முதல்வர் விஜய் எனப் புகழும் வீடியோக்களும் வெளியாகின்றன.

இந்நிலையில், தமிழகத்தின் சட்டம் – ஒழுங்கு பிரச்னைகளை முன்வைத்து பா.ஜ., விமர்சனத்தைத் தொடங்கியுள்ளது. தேனி சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியதாகவும், குழந்தைகள் காணாமல் போவதாகவும் குற்றஞ்சாட்டி, த.வெ.க., – காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு பா.ஜ., கேள்வி எழுப்பியுள்ளது. விஜயின் தேசிய அளவிலான செல்வாக்கைக் குறைக்கும் அரசியல் வியூகமாக இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது.

திருப்பூர் குன்னத்தூரில் கவன ஈர்ப்பு பேரணி!

திருப்பூர், அக். 29–

திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பகுதியில் அத்திக்கடவு அவினாசி திட்ட கூட்டமைப்பின் சார்பில் விடுபட்ட குளம் குட்டைகளை இணைக்க கோரி குன்னத்தூரில் மக்கள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது பெருந்துறை முதல் ஆறாவது நீரூற்று நிலையம் வழியாக காரமடை வரை விடுபட்டுள்ள அனைத்து குளம் குட்டைகளை குறிப்பாக பெருந்துறை அவிநாசி பெருமாநல்லூர் குன்னத்தூர் சேவூர் ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து திட்ட பணிகளை விரைந்து தொடங்கிட கோரியும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட திட்டத்தில் உள்ள குறைகளை உடனடியாக சரி செய்திடவும் மற்றும் பாண்டி ஆறு பவானி ஆறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்திடவும் பசுமை நீர் வலை பின்னல் திட்டம் குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி கையில் பதாகைகளை ஏந்தியபடி பெண்கள் விவசாயிகள் பொதுமக்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் என சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் விவசாய சங்கங்கள் பொதுமக்கள் 3 கிலோ மீட்டர் தூரம் பேரணியாக சென்றனர் மேலும் விரைவில் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினராக விஜய் சீதாராமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் விடுபட்டுள்ள 1400 குலம் குட்டைகளை தடையின்றி தண்ணீர் செல்வதற்கு வழிவகை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டனர் பேரணி ஏற்பாடு குன்னத்தூர் பகுதி அத்திக்கடவு அவினாசி திட்ட குழுவினர்...

திருப்பூரில் அதிமுக 6-வது வார்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்: 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

திருப்பூர், அக். 29–

திருப்பூர் மாநகர் மாவட்ட அதிமுக, தொட்டிபாளையம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட 6–வது வார்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தொட்டிபாளையம் பகுதி செயலாளரும், முன்னாள் கவுன்சிலருமான விஜயகுமார் தலைமை தாங்கினார். இதில் திருப்பூர் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் வேல்குமார் சாமிநாதன் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.அப்போது, பகுதி கழக நிர்வாகிகள் தங்களது பணிகளை எவ்வாறு மேற்கொள்வது, வரும் உள்ளாட்சித் தேர்தலில் கட்சியின் வெற்றிக்காக ஒருங்கிணைந்து செயல்படுவது, தேர்தல் பணிகளைத் திட்டமிட்டு முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் காட்டன் சித்ரா, நெசவாளர் அணி மாவட்டச் செயலாளர் ஜெகநாதன், முன்னாள் கவுன்சிலர் சபரிஸ்வரன், 6–வது வார்டு செயலாளர்கள் ராஜேஸ்குமார், கண்ணன், பண்ணாரி, மாவட்டப் பிரதிநிதி ஜெயக்குமார், மாணவர் அணி பகுதி துணைத் தலைவர் வைத்தீஸ்வரன், பகுதி இளைஞரணி தலைவர் சந்தோஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.மேலும், இளைஞரணி நிர்வாகிகள் விக்கி, ஸ்ரீராம், நாகூர் மீரான், சபரி, பிரேம், விஜய், எம்.ஜி.ஆர். காலனி ஜெகநாதன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் என 100–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட தலைநகரங்களில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. ஈரோட்டில் தாலுக்கா அலுவலகம் முன்பு நடைபெற்ற போராட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ரமேஷ் தலைமை தாங்கினார் செந்தில்நாதன் வரவேற்புரையாற்றினார். வி எஸ். சரவண மணி, ராக்கி முத்து, கௌரிசங்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் பல்வேறு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று எழுச்சி உரையாற்றினார் மாவட்டச் செயலாளர் ச. விஜய மனோகரன். இந்நிகழ்ச்சியில் மு சீனிவாசன் ஜி சசிகலா, ஆர் சுமதி உள்ளிட்ட அரசு ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நவம்பர் மாத ராசிபலன்கள்!

பணவரவு யாருக்கு? பதவி உயர்வு யாருக்கு? எச்சரிக்கையாக இருக்க வேண்டிய ராசிகள் எவை?

நவம்பர் மாதத்தில் கிரகங்களின் சஞ்சாரம், ஜோதிட நம்பிக்கைகளின்படி, ஒவ்வொரு ராசிக்கும் வெவ்வேறு பலன்களை அளிப்பதாகக் கருதப்படுகிறது. தொழில், பணவரவு, குடும்பம், ஆரோக்கியம், திருமணம், கல்வி ஆகியவற்றில் 12 ராசிகளுக்குமான பொதுவான மாதப் பலன்களைக் காண்போம்.

இவை பாரம்பரிய ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையிலான பொதுப் பலன்கள்; உறுதியான எதிர்காலக் கணிப்புகள் அல்ல.

1. மேஷம் (அசுவினி, பரணி, கார்த்திகை 1)

தொழிலில் முன்னேற்றம் ஏற்படக்கூடிய மாதம். புதிய முயற்சிகளில் ஆர்வம் அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. குடும்பத்தில் சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். வேலை தேடுபவர்களுக்கு வாய்ப்புகள் அமையலாம்.

அதிர்ஷ்ட எண்: 9 | நிறம்: சிவப்பு

2. ரிஷபம் (கார்த்திகை 24, ரோகிணி, மிருகசீரிடம் 12)

நீண்ட நாட்களாகத் தள்ளிப்போன பணிகளை முடிக்க முயற்சி மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. கடன் கொடுப்பதிலும் வாங்குவதிலும் கவனம் தேவை. மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட எண்: 6 | நிறம்: வெள்ளை

3. மிதுனம் (மிருகசீரிடம் 34, திருவாதிரை, புனர்பூசம் 13)

உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் அமையலாம். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கக்கூடும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பயணங்களில் கவனம் தேவை. உடல்நலத்தில் அலட்சியம் வேண்டாம்.

அதிர்ஷ்ட எண்: 5 | நிறம்: பச்சை

4. கடகம் (புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்)

குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். நீண்டகாலமாக எதிர்பார்த்த நல்ல தகவல்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. சொத்து தொடர்பான முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். பணவரவு இருந்தாலும் சேமிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உறவினர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது.

அதிர்ஷ்ட எண்: 2 | நிறம்: முத்து வெள்ளை

5. சிம்மம் (மகம், பூரம், உத்திரம் 1)

தலைமைப் பண்புகள் வெளிப்படும் மாதம். பணியிடத்தில் பாராட்டுகள் கிடைக்கலாம். பதவி உயர்வுக்கான முயற்சிகளில் சாதகமான சூழல் உருவாக வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அதிகப்படியான தன்னம்பிக்கையால் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம்.

அதிர்ஷ்ட எண்: 1 | நிறம்: தங்க நிறம்

6. கன்னி (உத்திரம் 24, அஸ்தம், சித்திரை 12)

திட்டமிட்ட பணிகளில் முன்னேற்றம் காணலாம். தொழிலில் போட்டிகளைச் சமாளிக்க வேண்டி யிருக்கும். செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் குடும்ப வரவு செலவுகளைத் திட்டமிடுவது நல்லது. மாணவர்கள் கூடுதல் முயற்சியால் கல்வியில் முன்னேறலாம். புதிய முதலீடுகளில் கவனம் அவசியம்.

அதிர்ஷ்ட எண்: 5 | நிறம்: இளம் பச்சை

7. துலாம் (சித்திரை 34, சுவாதி, விசாகம் 13)

புதிய தொடர்புகள் மூலம் தொழில் வாய்ப்புகள் உருவாகலாம். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் குறித்த பேச்சு வார்த்தைகள் நடை பெறலாம். பணவரவு சீராக இருக்கும் என எதிர்பார்க்கலாம். கூட்டுத்தொழிலில் ஒப்பந்தங்களை முழுமையாகப் படித்து முடிவெடுக்க வேண்டும்.

அதிர்ஷ்ட எண்: 6 | நிறம்: இளஞ்சிவப்பு

8. விருச்சிகம் (விசாகம் 4, அனுஷம், கேட்டை)

முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாகலாம். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படலாம். தொழிலில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த ஆர்வம் ஏற்படும். குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

அதிர்ஷ்ட எண்: 9 | நிறம்: அடர் சிவப்பு

9. தனுசு (மூலம், பூராடம், உத்திராடம் 1)



ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் மேற்கொள்ள வாய்ப்புள்ளது. வேலை தேடுபவர்களுக்கு நேர்முகத் தேர்வு அழைப்புகள் கிடைக்கலாம். தொழிலில் படிப்படியான முன்னேற்றம் காணலாம். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும் என்பதால் சேமிப்பில் கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்: 3 | நிறம்: மஞ்சள்

10. மகரம் (உத்திராடம் 24, திருவோணம், அவிட்டம் 12)



கடின உழைப்புக்கான பலன் கிடைக்கக்கூடிய மாதம். தொழிலில் நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க முயற்சி மேற்கொள்வீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம். குடும்பத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். சொத்து தொடர்பான ஆவணங்களைச் சரிபார்ப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்: 8 | நிறம்: நீலம்

11. கும்பம் (அவிட்டம் 34, சதயம், பூரட்டாதி 13)

தொழிலில் மாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். புதிய முயற்சிகளில் பொறுமை அவசியம். பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகள் பயனுள்ளதாக அமையலாம். உடல்நலத்திலும் ஓய்விலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதிர்ஷ்ட எண்: 8 | நிறம்: கருநீலம்

12. மீனம் (பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகலாம். தொழிலில் புதிய வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பணவரவு கிடைக்க வாய்ப்புள்ளது. மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றம் ஏற்படலாம். அவசர முதலீடுகளைத் தவிர்த்து நிதானமாக முடிவெடுப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்: 3 | நிறம்: மஞ்சள்

ஒட்டன்சத்திரத்தில் முன் அறிவிப்பின்றி மின்தடை: பொதுமக்கள் அவதி!

ஒட்டன்சத்திரம், அக். 29–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் துணை மின் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று முன் அறிவிப்பு இன்றி மின்தடை ஏற்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

முன்னறிவிப்பு ஏதுமின்றி திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் வீடுகள், கடைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அன்றாடப் பணிகள் பாதிக்கப்பட்டன. மின்சாரத்தை நம்பி தொழில் செய்து வரும் வியாபாரிகளும், பொதுமக்களும் சிரமத்திற்கு ஆளாகினர்.

மின்தடை ஏற்படுவது குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தால், அதற்கேற்ப தங்களது பணிகளைத் திட்டமிட்டிருக்க முடியும் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, மின்தடை ஏற்படும் சூழலில் பொதுமக்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கவும், தடையற்ற மின்சாரம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவும் சம்பந்தப்பட்ட மின்வாரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

அவசரமாகச் சாப்பிடுகிறீர்களா? நீரிழிவு அபாயம் அதிகரிக்கலாம்!

இன்றைய பரபரப்பான வாழ்க்கையில் பலரும் உணவை அவசரமாகச் சாப்பிடுகின்றனர். உணவை நன்றாக மென்று சாப்பிடாமல் விழுங்குவது செரிமானக் கோளாறு, வயிறு உப்புசம், நெஞ்செரிச்சல் உள்ளிட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

வேகமாகச் சாப்பிடும்போது வயிறு நிறைந்த உணர்வு ஏற்படுவதற்கு முன்பே அதிக அளவை உட்கொள்ள நேரிடும். இதனால் உடல் எடை அதிகரிக்க வாய்ப்புள்ளது. வேகமாகச் சாப்பிடும் பழக்கத்திற்கும் உடல் பருமன், இன்சுலின் எதிர்ப்புத் தன்மை போன்ற பிரச்சினைகளுக்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவை வகை 2 நீரிழிவு அபாயத்தை அதிகரிக்கக்கூடும்.

எனவே, உணவை மெதுவாகவும் நன்றாக மென்றும் சாப்பிட வேண்டும். சாப்பிடும்போது செல்போன், தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். காய்கறிகள், முழுத் தானியங்கள், புரதச்சத்து நிறைந்த உணவுகளைச் சேர்த்துக்கொள்வது நல்லது.

உணவு என்ன என்பது மட்டுமல்ல; அதை எப்படிச் சாப்பிடுகிறோம் என்பதும் ஆரோக்கியத்திற்கு முக்கியம்!

தங்கம், வெள்ளி விலை நிலவரம்!

சென்னை, அக். 29–

தங்கம் விலை உயரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், விலை மாற்றமின்றி விற்பனையாகிறது. கிராம் ரூ.13,195–க்கும் சவரன் ரூ.1,05,560–க்கும் விற்பனையாகிறது. நான்கு நாட்களாக விலை மாற்றமின்றி விற்பனையான வெள்ளி விலை இன்று சற்று குறைந்துள்ளது. கிராமுக்கு 5 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.215–க்கும், ஒரு கிலோ ரூ.2.15 லட்சத்திற்கும் விற்பனையாகிறது.



சினிமா துளிகள்..!

இளையராஜாவின் ஆஸ்தான கிதார் கலைஞர் சதானந்தம் காலமானார்!



தமிழ் திரையிசை உலகில் இசைஞானி இளையராஜா குழுவின் மூத்த மற்றும் புகழ்பெற்ற முன்னணி கிதார் கலைஞரான திரு. எஸ். சதானந்தம் (சதா மாஸ்டர்), இன்று தனது 79ஆவது வயதில் காலமானார். 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 அன்று பிறந்த இவர், முதுமை மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக மறைந்துள்ளார்.

திரு. சதானந்தம் அவர்கள், தென்னிந்திய திரை உலகின் பழம்பெரும் புகழ்பெற்ற இசையமைப்பாளரான சுதர்சனம் அவர்களின் மகனாவார்.

இசைஞானி இளையராஜாவின் இசைக்குழுவில் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக முதன்மை கிதார் கலைஞராகப் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு. இளையராஜாவின் முதல் படமான அன்னக்கிளி முதற்கொண்டு ஆயிரக்கணக்கான பாடல்களுக்கு இவர் கிதார் வாசித்துள்ளார்.

இளையராஜாவின் இசையில் நாம் கேட்டு உருகிய பல நூறு சூப்பர்ஹிட் பாடல்களின் ஆரம்ப இசை மற்றும் இடைக்கால இசைத் துணுக்குகளுக்கு சொந்தக்காரர் இவரே. நைலான் கிதார், ஸ்டீல் கிதார், எலக்ட்ரிக் கிதார் என அனைத்து வகையான கிதார்களிலும் வித்தை காட்டியவர். இவர் வெறும் கிதார் கலைஞர் மட்டுமல்லாது, கீபோர்டு மற்றும் வைப்ராஃபோன் போன்ற பிற இசைக்கருவிகளையும் வாசிப்பதில் வல்லவர். அவரது மறைவுச் செய்தி வெளியானதைத் தொடர்ந்து, ஒட்டுமொத்த தென்னிந்திய இசைத்துறையினரும், திரையுலக ரசிகர்களும் தங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

"தமிழ் சினிமாவின் தலைசிறந்த கிதார் மேஸ்ட்ரோக்களில் ஒருவரை நாம் இழந்துவிட்டோம்.எனினும் அவர் வாசித்த இசை என்றும் நமது இதயங்களில் வாழும்" என சக இசைக் கலைஞர்களும் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் உருக்கமாகப் பதிவிட்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். கோட்டையான நாக்பூரை தக்கவைத்த காங்கிரஸ்! எம்எல்சி தேர்தலில் முதல் வெற்றி!

புதுடெல்லி, அக். 29–

உத்தரப் பிரதேசம், பிகார், மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய 4 மாநில சட்ட மேலவைகளில் 28 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்றன. வாக்குச் சீட்டு முறையில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் மொத்தம் 28 ஆசிரியர்கள், பட்டதாரிகள் தொகுதிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் நடைபெற்றது. உத்தரப் பிரதேசத்தில் 11 (ஆசிரியர்கள் 6, பட்டதாரிகள் 5), பிகாரில் 8 (ஆசிரியர்கள், பட்டதாரிகள் தலா 4), மகாராஷ்டிரத்தில் 5 (ஆசிரியர்கள் 2, பட்டதாரிகள் 3), கர்நாடகத்தில் 4 (ஆசிரியர்கள், பட்டதாரிகள் தலா 2) தொகுதிகளுக்கு வாக்குச்சீட்டு முறையில் நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும்பணிகடந்தசெவ்வாய்க்கிழமை தொடங்கியது. பெரும்பாலான இடங்களுக்கு புதன்கிழமை முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

மாநில சட்டமேலவை தேர்தல்களில் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்த காங்கிரஸ் கட்சி கர்நாடகத்தில் நான்கு தொகுதிகளிலும் தோல்வியைத் தழுவியது. அதேநேரத்தில் ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கத்தின் (ஆர்எஸ்எஸ்) கோட்டையாகக் கருதப்படும் மகாராஷ்டிர சட்ட மேலவையின் நாக்பூர் பிரிவு பட்டதாரிகள் தொகுதியில் வாக்கு எண்ணிக்கை நீண்ட நேரம் நடைபெற்றது.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் காங்கிரஸ் வேட்பாளர் அபிஜித் கோவிந்தராவ் வஞ்சாரி, பாஜகவின் சுதாகர் கோஹ்லேவை 3,271 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி வாகை சூடினார். வஞ்சாரி, கடந்த 2020–ஆம் ஆண்டில் நாக்பூர் பட்டதாரிகள் தொகுதியில் வெற்றி பெற்றிருந்தார். மீண்டும் வெற்றி பெற்று தனது செல்வாக்கை நிரூபித்துள்ளார்.

மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸின் சொந்த ஊராகவும், மத்திய அமைச்சர் நிதின் கட்கரி பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களவைத் தொகுதியாகவும் இருக்கும் நாக்பூரில் காங்கிரஸ் மீண்டும் வெற்றி பெற்றிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

'தவெகவின் ரெய்டுக்கு திமுக தொண்டரின் கால் நகம்கூட அஞ்சாது' – மு.க. ஸ்டாலின்!

சென்னை, அக். 29–

தமிழக வெற்றிக் கழகத்தின் ரெய்டுக்கு திமுக தொண்டரின் கால் நகம்கூட அஞ்சாது என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ரூ.634 கோடி மதிப்பிலான பணி நியமன முறைகேடு, ஒப்பந்த முறைகோடு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சரும், திமுக முதன்மைச் செயலருமான கே.என். நேருவின் தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை (அக்.29) காலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர். திருச்சி தில்லை நகரில் உள்ள வீடு உள்பட சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதும் 20–க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

அதேநேரத்தில் நாமக்கல்லில் திமுக முன்னாள் எம்.எல்.ஏ ராமலிங்கம் வீட்டிலும், வேலூர் மாவட்ட திமுக செயலரும் அணைக்கட்டு முன்னாள் எம்.எல்.ஏ நந்தகுமாரின் காட்பாடி காந்திநகரில் வீட்டிலும் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், திமுக நிர்வாகிகள் வீட்டில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்துவதற்கு கண்டனம் தெரிவித்து திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "பெண்கள், குழந்தைகள், முதியோர் என யாருக்கு பாதுகாப்பு இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றிவிட்ட முதலமைச்சர், மக்களின் கவனத்தையும் ஊடகங்களின் Breaking News–ஐயும் திசைதிருப்ப சாலைவலம் நடத்தலாமா? Raidshow நடத்தலாமா? எனச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

ஊழல் பெருச்சாளிகளை எல்லாம் பேரக் குதிரைகளாக மாற்றி தன் கட்சியில் இணைத்துக் கொண்டிருக்கும் த.வெ.க. எனும் "TN Branch Washing Machine", தி.மு.க. ஆட்சியின் முன்னாள் அமைச்சர்களை மட்டும் குறிவைத்து நடத்திக் கொண்டிருக்கும் "Vettri Vendetta Politics" திட்டம், வழக்கம் போல் சட்டத்தின் முன் தோற்று, மக்கள் முன் தலைகுனிந்து நிற்கும்!

திருச்சிகிழக்கு இடைத்தேர்தலுக்கான ரீல்ஸ் விடியோக்களைத் தயாரிக்கவும் – முதல்வர் மேடையில் பஞ்ச் டயலாக் என்ற பெயரில் பல மாடுலேஷனில் காட்டுக்கத்து கத்தவும் நடத்தப்படும் இந்த ரெய்டுகளைக் கண்டு தி.மு.க.வின் கடைக்கோடிக் தொண்டரின் கால் நகம்கூட அஞ்சாது!

சட்டம் – ஒழுங்கு சீர்கேடு, துருப்பிடித்துவிட்ட நிர்வாகம், வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வு என மக்களை பாதித்துக் கொண்டிருக்கும் இந்த தவெக ஆட்சியைக் கண்டு, தமிழ்நாடு மட்டுமல்ல இந்திய நாடே எள்ளி நகைக்கிறது. இதை எல்லாம் மறைக்க, தி.மு.க.வினருக்கு வாய்ப்பூட்டு போடலாம் என்று நினைக்கிறீர்கள். இனி இன்னும் இன்னும் வேகமாகத் த.வெ.க. அரசின் வண்டவாளங்களைத் தண்டவாளம் ஏற்றுவோம்!" எனப் பதிவிட்டுள்ளார்.

கே.என்.நேரு வீட்டில் சோதனை?

திருச்சி, அக். 29–

கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ரூ.634 கோடி மதிப்பிலான பணி நியமன முறைகேடு மற்றும் ஒப்பந்த முறைகோடு தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சரும், திமுக முதன்மைச் செயலருமான கே.என். நேருவின் தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை (அக்.29) காலை முதல் மீண்டும் சோதனை நடத்தி வருகின்றனர்.

3 வாகனங்களில் வந்த 15 லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள், தில்லை நகர் 5 ஆவது குறுக்கு தெருவில் உள்ள வீட்டில் சோதனை செய்து வருகின்றனர்.

திருச்சி தில்லை நகரில் உள்ள வீடு உள்பட சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதும் 20–க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

கடந்த செப்.5 ஆம் தேதி நேரு தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தியது நிலையில் இன்று மீண்டும் சோதனை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று சென்னை ஆர்.ஏ. புரத்தில் உள்ள நேரு சகோதரர் ரவிச்சந்திரன் வீடு, அலுவலகத்திலும் சோதனை நடத்தி வருகின்றனர். வரும் நவ.16 ஆம் தேதி நேருவின் தம்பி ரவிச்சந்திரன் மகனுக்கு திருமணம் நடைபெற உள்ள நிலையில், இந்த சோதனை அரசியல் வட்டார ரத்தையும் தாண்டி அவரது குடும்ப உறவுகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ஆசிரியர்கள் வெளியே செல்ல தடை?

சென்னை, அக். 29–

பணி நேரத்தில் பள்ளி வளாகத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது என அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி யுள்ள சுற்றறிக்கை: பள்ளி வேலை நேரத்தில், ஆசிரியர்கள் எவரும் பள்ளி வளாகத்தை விட்டு உணவு இடைவேளை உள்பட வெளியே செல்லக் கூடாது. மேலும், பள்ளி சூழலில், அசாதாரண நிகழ்வுகள் நடந்தால், கண்டிப்பாக உயர் அலுவலருக்கு, தகவல் தெரிவிக்க வேண்டும். அவர்களின் ஆலோசனை பெற வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

உத்தரவின் பின்னணி: இந்த உத்தரவின் பின்னணியில் பல்வேறு முக்கியக் காரணங்கள் இருப்பதாகக் கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, பள்ளி வேலை நேரங்களின்போது ஆசிரியர்கள் தங்களின் சொந்தக் காரணங்களுக்காகவோ அல்லது வெளி வேலைகளுக்காகவோ வளாகத்தை விட்டு வெளியே சென்றால், வகுப்பறைகளில் மாணவர்களைக் கண்காணிப்பதில் தொய்வு ஏற்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன.

அதேபோன்று, மதிய உணவு இடைவேளையின்போது ஆசிரியர்கள் வெளியில் சென்றால், மாணவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வது, விபத்துகளில் சிக்குவது போன்ற அசம்பாவிதங்கள் நடப்பதைத் தடுக்கவே இந்த வளாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிகளில் ஏதேனும் அசாதாரண சம்பவங்கள், ஜாதிய மோதல்கள் அல்லது ஒழுங்கீன பிரச்னைகள் ஏற்படும்போது, தலைமை ஆசிரியர்கள் தன்னிச்சையாக எடுக்கும் சில முடிவுகள் சட்டம்–ஒழுங்கு சிக்கலாக மாறுவதைத் தவிர்க்க, கல்வித் துறை உயரதிகாரிகளுக்கு உடனடியாகத் தகவல் தெரிவிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது.

கன்டெய்னர் உற்பத்திக்கு ரூ.10 ஆயிரம் கோடி: மத்திய அமைச்சரவை ஒப்புதல்!

புதுடெல்லி, அக். 29–

இந்தியாவில் உலகத்தரம் வாய்ந்த கன்டெய்னர் உற்பத்தி சூழலை உருவாக்க, கன்டெய்னர் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 2039–40 நிதியாண்டு வரை செயல்படுத்தப்படவுள்ள இந்த திட்டத்திற்கு ரூ.10 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ் வட்டி மானியமாக ரூ.859 கோடியும், செயல்பாட்டு செலவு உதவியாக ரூ.8 ஆயிரத்து 891 கோடியும் வழங்கப்பட உள்ளது.

மேலும், சோதனை மற்றும் சான்றிதழ் உதவி மற்றும் நில குத்தகை ஆதரவு ஆகியவையும் இந்த திட்டத்தின் முக்கிய கூறுகளாக உள்ளன. புதிய உற்பத்தி ஆலைகளை நிறுவுவதற்கும், ஏற்கனவே உள்ள ஆலைகளை விரிவுபடுத்துவதற்கும் இது உதவும். இதன் மூலம் ஆண்டுக்கு 7.5 லட்சம் டி.இ.யு. அளவுக்கு உற்பத்தித் திறனை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 3 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும். மத்திய பட்ஜெட் 2026–27–ல் அறிவிக்கப்பட்ட இத்திட்டம், இந்தியாவை கன்டெய்னர் ஏற்றுமதி மையமாக மாற்ற வழிவகுக்கும் என்று அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு

இஸ்ரோவில் 96 காலியிடங்கள்!

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) கீழ் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் செயல்படும் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் 96 காலிப் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பல்நோக்குப் பணியாளர் (MTS), தொழில்நுட்ப உதவியாளர், அறிவியல் உதவியாளர், தீயணைப்பு வீரர், டெக்னீசியன், இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர், நூலக உதவியாளர், செவிலியர், வரைவாளர் உள்ளிட்ட பணிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இவை மத்திய அரசின் நிரந்தரப் பணியிடங்களாகும். பணிகளுக்கேற்ப கல்வித் தகுதி மற்றும் தேர்வு முறைகள் மாறுபடும்.

ஆன்லைன் விண்ணப்பப் பதிவு அக்டோபர் 19–ஆம் தேதி தொடங்கியுள்ளது. விண்ணப்பிக்க நவம்பர் 9–ஆம் தேதி இரவு 11.59 மணி கடைசி நாளாகும்.

அறிவிப்பு எண்: SDSC SHAR/RMT/03/2026

விண்ணப்ப இணையதளம்: https://apps.shar.gov.in/

புழல் சிறையில் அன்பில் மகேஸை சந்தித்த உதயநிதி

ரூ. 400 கோடி லஞ்சம்: முன்னாள் எம்.எல்.ஏ. முத்துக்குமார் நீதிமன்றத்தில் சரண்!

சென்னை, அக். 29–

தனியார் பள்ளி களுக்கு அங்கீகாரம் கொடுக்க ரூ.400 கோடி லஞ்சம் பெற்ற வழக்கில் திமுக முன்னாள் எம்.எல்.ஏ. முத்துக்குமார் சென்னை சிறப்பு நீதி மன்றத்தில் சரணடைந்தார்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் கைது செய்யப்பட்ட வழக்கில் தேடப்பட்டு வந்த முத்துக்குமாருக்கு உச்ச நீதிமன்றம் முன் ஜாமீன் வழங்க மறுத்து உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், தலைமறைவாகியிருந்த அவர் ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எல். எஸ்.சத்தியமூர்த்தி முன்பாக வியாழக்கிழமை (அக். 29) காலை சரணடைந்தார்.

விருதாச்சலம் தொகுதியில் எம்எல்ஏவாக இருந்த முத்துக்குமார் திமுக ஆட்சியில் பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவராகவும் இருந்தார்.

இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

இன்றைய கார்ட்டூன்

அரசியலில் ஏசி... சிறையில் கொசுக்கடி!

நான்கு புற எல்லைகள் இல்லாமல் கூகுள் மேப் வைத்து பத்திரப்பதிவு செய்யலாமா?

சென்னை, அக். 29–

புதுச்சேரியைச் சேர்ந்த ஜெயகாந்தன் என்பவர், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், 'சொத்துப் பத்திரப்பதிவின்போது நிலத்தின் நான்கு புற எல்லைகளை குறிப்பிடாமல், 'கூகுள் மேப்' அல்லது 'ஜி.பி.எஸ்.' விவரங்களை மட்டும் பயன்படுத்தி பத்திரப்பதிவு செய்யலாமா?'' என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

மேலும், நான்கு புற எல்லைகளை குறிப்பிடுவது தொடர்பான பதிவு விதிகள் மற்றும் சட்டப்பிரிவுகளின் நகல்களையும் கேட்டிருந்தார். அதோடு, பதிவுத்துறையின் 'ஸ்டார் 3.0' திட்டத்தில் ஜி.ஐ.எஸ். வரைபடம் நான்கு புற எல்லைகளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுமா அல்லது கூடுதல் ஆவணமாக இணைக்கப்படுமா என்றும் கேட்டிருந்தார்.

இதற்கு பதிவுத்துறை அளித்த பதிலில், 'கடந்த 2023–ம் ஆண்டு செப்டம்பர் 26–ந்தேதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் நகல் வழங்கப்பட்டு உள்ளது. அந்த சுற்றறிக்கையின்படி, பத்திரப்பதிவு ஆவணத்தில் குறிப்பிடப்படும் சொத்தின் புவியியல் ஆயத்தொலைவுகளுடன் நிலம் அமைந்துள்ள இடத்தை காட்டும் அட்சரேகை, தீர்க்கரேகை எண்கள் புகைப்படத்தையும் இணைக்க வேண்டும்.



அந்த புகைப்படத்தை ஏ4 தாளில் அச்சிட்டு, ஆவணத்தின் ஒரு பகுதியாக இணைத்து, பக்க எண்ணை குறிப்பிட வேண்டும். புகைப்படத்தில் ஆவணம் எழுதுபவர் மற்றும் எழுதி வாங்குபவர் கையொப்பமிட வேண்டும். இந்த நடைமுறை 2023–ம் ஆண்டு அக்டோபர் 1–ந்தேதி முதல் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் பின்பற்றப்பட வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்ற கேள்விகளுக்கு தேவையான தகவல்கள் பதிவுத்துறையின் பதிவேடுகளில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2020–ம் ஆண்டு ஜனவரி 1–ந்தேதி முதல் 2026–ம் ஆண்டு ஆகஸ்டு 31–ந்தேதி வரை, நான்கு புற எல்லைகள் சரியாகக் குறிப்பிடப்படாமல் அல்லது 'கூகுள் மேப்' பயன்படுத்தி பத்திரப்பதிவு செய்யப்பட்டதாக பெறப்பட்ட புகார்கள் மற்றும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களும் கேட்கப்பட்டிருந்தன. ஆனால், நான்கு புற எல் லைகளுக்குப் பதிலாகக் கூகுள் மேப் அல்லது ஜி.பி.எஸ். விவரங்களை மட்டும் பயன்படுத்திப் பத்திரப்பதிவு செய்ய லாமா என்பது குறித்து பதிவுத்துறை நேரடியான பதில் அளிக்கவில்லை.

மரக்கன்றுகள் விழிப்புணர்வு வழங்கிய இயற்கை ஆர்வலர்

மதுரை மாவட்டம் இரணியம் கிராமத்தில் மதுரை சமூக அறிவியல் கல்லூரி சார்பில் ''வியூகம் 2026'' கிராமிய முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினார். மாணவர்கள் இந்த முகாமில் மட்டுமின்றி தங்கள் வாழ்நாள் முழுதும் இயற்கைக்கும் மனிதருக்கும் பயன்பட்டு வாழ வேண்டும் என்று பேசினார். முதலாம் ஆண்டு முதுகலை சமூகப் பணித்துறை மாணவர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர். உதவி பேராசிரியர்கள் ராஜலட்சுமி, குருமூர்த்தி, சமூக சேவகர் ரமேஷ்குமார் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதிமுக, பாமக-விற்கு மத்திய அமைச்சர் பதவி?

சென்னை, அக். 29–

தமிழகத்தில், கூட்டணி கட்சிகளுக்கு, இரண்டு மத்திய இணை அமைச்சர் பதவிகளை வழங்க, பா.ஜ., மேலிடம் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த 2024 லோக்சபா தேர்தலில், தே.ஜ., கூட்டணியில் பா.ஜ., – பா.ம.க., – அ.ம.மு.க., – த.மா.கா., புதிய நீதிக் கட்சி, இந்திய ஜனநாயக கட்சி உள்ளிட்டவை இடம் பெற்றன. கடந்த சட்டசபை தேர்தலில், தே.ஜ., கூட்டணியில் அ.தி.மு.க., – பா.ம.க., – அ.ம.மு.க., – த.மா.கா., கட்சிகள் இடம்பெற்றன.

தற்போது, அ.தி.மு.க., – பா.ம.க., – அ.ம.மு.க., கட்சிகள், தே.ஜ., கூட்டணியில் நீடிக்கின்றன. கடந்த 2021ல் இருந்து மத்திய இணை அமைச்சராக இருந்த, தமிழகத்தை சேர்ந்த எல்.முருகன், சமீபத்தில் ராஜினாமா செய்தார்.

மத்தியப் பிரதேசத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜ்யசபா எம்.பி., பதவியிலிருந்தும் விலகினார்.

இந்த இடத்தை கைப்பற்ற, பா.ஜ., தமிழக தலைவர்களும், தமிழக நிர்வாகிகளும் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். ஆனால், தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு மத்திய அமைச்சர் பதவி கொடுத்தால், அது, தே.ஜ., கூட்டணியை பலப்படுத்துவதோடு, வரும் 2029 லோக்சபா தேர்தலில் பலன் அளிப்பதாக இருக்க வேண்டும் என, பா.ஜ., மேலிடம் கருதுவதாக கூறப்படுகிறது.

தமிழக பா.ஜ.,வை சேர்ந்தவர்களுக்கு கவர்னர், துணை ஜனாதிபதி உள்ளிட்ட பதவிகளை அளித்தும், தேர்தல் அரசியலில் எந்த பலனும் கிடைக்கவில்லை. எனவே, வரும் தேர்தலில் தே.ஜ., கூட்டணியை பலப்படுத்தி தக்கவைக்க, நீண்ட கால நட்பு கட்சிகளான, அ.தி.மு.க., – பா.ம.க.,வுக்கு தலா ஒரு மத்திய இணை அமைச்சர் பதவி வழங்க, பா.ஜ., மேலிடம் ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பா.ஜ., தமிழக நிர்வாகிகள் கூறியதாவது: தமிழகத்தில் கூட்டணி ஆட்சி நடைமுறை தொடங்கி விட்டது. எனவே, தமிழகத்தில் தே.ஜ., கூட்டணியை விரிவுபடுத்தவும், கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைக்கவும், ஒருமித்த கருத்துள்ள கட்சிகளுக்கு மத்திய அமைச்சரவையில் இடமளிக்க, பா.ஜ., மேலிடம் விரும்புகிறது. எனவே, தமிழகத்தை சேர்ந்த பா.ஜ.,வினருக்கு பதிலாக, கூட்டணி கட்சிகளுக்கு மத்திய அமைச்சர் பதவி கிடைக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

மாற்றுத்திறனாளிகளுக்கும் இலவச பஸ் பயணம்!

சென்னை, அக். 29–

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான இலவச பஸ் பயணத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்படி, பல்வேறு வகையான அரசு பஸ்களில் மாற்றுத்திறனாளிகள் கட்டணமின்றி பயணம் செய்ய அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:–

2016–ம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 21 வகையான மாற்றுத்திறன்களில் 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் பாதிப்பு தன்மை கொண்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர் ஒருவருக்கு தமிழக அரசின் போக்குவரத்து கழகங்களால் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பஸ்களில் இலவசமாக பயணம் செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது. இதற்கிடையே தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையை பயன்படுத்தி அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் தனியாக செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் உதவியாளர் ஒருவருடன் அரசு போக்குவரத்துக் கழகங்களின் தாழ்தளப் பஸ்கள், விரைவு பஸ்கள், டீலக்ஸ், எல்.எஸ்.எஸ்., புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் சாதாரண கட்டண பஸ்களில் கட்டணமில்லாமல் செல்லும் வகையில் பயண திட்டத்தை விரிவுபடுத்தி உத்தரவிடப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒப்பந்த பணியாளர்களை வழங்க ஓ.எம்.சி.எல். நிறுவனம் நியமனம் - தமிழக அரசு உத்தரவு!

சென்னை, அக். 29–

அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு மனிதவளத்தை வெளிமுகமை மூலம் வழங்குவதற்கு ஓ.எம்.சி.எல். நிறுவனத்தை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு ஆகும் சம்பளச்செலவு, படிகள் உள்ளிட்ட சலுகைகள், ஓய்வூதியங்கள் என கொடுக்கப்படும் ஊதியத்தை, பெரும் சுமையாக ஆட்சியாளர்கள் கருதத் தொடங்கினர். அதன்படி, சில பணிகளுக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அரசு தேர்வு செய்ய தொடங்கியது. கீழ்நிலைப் பணிகளில் முதலில் இதை அரசு நடைமுறைப்படுத்தியது. பின்னர் படிப்படியாக திறன் பணிகளுக்கும் ஒப்பந்தப் பணியாளர்களை அரசு நியமிக்கத் தொடங்கியது. இதற்கு சில ஒப்பந்ததாரர் நிறுவனங்களையும் அரசுத் துறைகள் தேர்வு செய்து வைத்திருந்தன. தேர்தல் கமிஷனும் கணினி இயக்கம் உள்ளிட்ட சில பணிகளுக்கு தொடர்ந்து ஒப்பந்த பணியாளர்களையே பயன்படுத்தி வருகிறது.

இந்தநிலையில் புதிய உத்தரவு மூலம் மற்றொரு மாற்றத்தை தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எம்.ஏ.சித்திக்கின் உத்தரவு வருமாறு:– தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகளில் வெளிப்படைத்தன்மைச் சட்டத்தின் அடிப்படையில் அறிவிப்பாணை வெளியிடப்படுகிறது. அதன்படி, அரசுத் துறைகள், மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அதுபோன்ற அமைப்புகளுக்கு மனித வளத்தை வெளிமுகமை மூலம் வழங்குவதற்கான, ஒரு முகமையாக சென்னையில் உள்ள அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை (ஓ.எம்.சி.எல்.) தமிழ்நாடு கவர்னர் நியமிக்கிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசு அதிகாரிகளிடம் விசாரித்தபோது அவர்கள் கூறியதாவது:–

அரசுக்குப் பணியாளர்கள் தேவையென்றால், அதற்காகத் தேர்வு நடத்தி ஆட்களை தேர்ந்தெடுப்பதில் மாற்றங்கள் இருக்காது. ஆனால் சில திறனற்ற அல்லது திறன் பணிகளுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆட்கள் தேவைப்பட்டால், ஒவ்வொரு அரசுத் துறைகளும், பொதுத்துறை நிறுவனங்களும், அரசு கழகங்களும், தனியார் ஒப்பந்த நிறுவனங்களை அணுகத் தேவையில்லை. அவர்கள் ஓ.எம்.சி.எல். நிறுவனத்தை அணுகினால் போதும். அப்படிப்பட்ட ஒப்பந்தப் பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், அதற்கான ஒப்பந்த அடிப்படையிலான மனிதவளத்தை ஓ.எம்.சி.எல். நிறுவனம் தேர்வு செய்து அளிக்கும்.

இவ்வாறு அவர்கள் விளக்கம் தெரிவித்தனர்.

543 புற்றுநோய் மருந்துகளின் விலை அதிரடி குறைப்பு!

புதுடெல்லி, அக். 29–

543 புற்றுநோய் மருந்துகளின் விலையை மத்திய அரசு குறைத்துள்ளது. இந்தியாவில் புற்றுநோய் மருந்துகளின் விலைகள் அதிகமாக உள்ளதால் நோயாளிகளும் அவர்களது குடும்பத்தினரும் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே மருந்துகளின் விலை நிர்ணயம் தொடர்பான மனுக்கள் மீது நேற்று முன் தினம் நடந்த விசாரணையில் உச்சநீதிமன்றம், ''மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லரை விலைக்கும், மருந்து கடைகளுக்கு அவை விற்பனை செய்யப்படும் விலைக்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு உள்ளது.

மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு சாதகமாக ஒட்டுமொத்த மருத்துவ துறையும் செயல்படுகிறதா?'' என கேள்வி எழுப்பியது.

இந்நிலையில் 137 வகையான மொத்தம் 543 புற்றுநோய் மருந்துகளின் விலையை மத்திய அரசு 70 முதல் 93 சதவீதம் வரை குறைத்துள்ளது.

மத்திய அரசின் தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம் நேற்று வெளியிட்ட உத்தரவில் இந்த விலைக்குறைப்பு அடுத்த மாதம் 9ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலை குறைக்கப்பட்ட மருந்துகளின் பட்டியலும் வெளியாகி உள்ளன. அதில் குறிப்பாக, மார்பக புற்றுநோய் மருந்தான பல்போசிலெப் உடைய விலை ரூ. 69,852 இல் இருந்து ரூ. 13,512 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 100 எம்ஜி கீமோதெரபி ஊசியான தொடிபா விலை ரூ. 80,072 இல் இருந்து ரூ. 7,150 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

420 எம்ஜி புற்றுநோய் ஊசி பிரிடுசொம்பா விலை ரூ. 94,951 இல் இருந்து ரூ. 30,593 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

400 எம்ஜி புற்றுநோய் ஊசி பிவாசிசுமாப் ரூ. 69,852 இல் இருந்து ரூ. 13,512 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

அபிரெட்ரோனி எனும் புரோஸ்டேட் (120) விலை ரூ. 28,000 இல் இருந்து ரூ. 4,840 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இரத்த புற்றுநோய் மருந்தான டசடினிப் ரூ. 17,811இல் இருந்த்து ரூ. 1,808 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் ஒட்டுமொத்தமாக புற்றுநோய் தொடர்பான 543 மருந்துகளின் விலை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக்குறைப்பால் நோயாளிகள், அவர்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இருப்பினும், 'கீட்ரூடா' மருந்தின் விலை ஒரு குப்பிக்கு, 2,16,500 ரூபாய் என்ற நிலை தொடர்கிறது.

ரிபோக்சிக்லிப், டாக்ரிசோ, டெசென்ட்ரிக், டார்சலெக்ஸ், இம்பின்ஸி உள்ளிட்ட சில முக்கிய மருந்துகளின் விலை மாற்றமின்றி நீடிக்கிறது.

தமிழகத்தில் மின் தேவை 21 ஆயிரம் மெகாவாட்டை தாண்டியது!

சென்னை, அக். 29–

'எல் நினோ' பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தால் வெப்பம் தொடர்ந்து நிலவுவதால், தமிழகத்தில் மின் தேவை அதிகரித்துள்ளது. கடந்த செப்டம்பர் மாதத்தில் தமிழகத்தின் அதிகபட்ச மின் தேவை 21,083 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பதிவான 18,386 மெகாவாட்டை விட 15 சதவீதம் அதிகமாகும்.

தென் மாநிலங்களில் கடந்த செப்டம்பர் மாதம் நிலவிய மின் தேவை குறித்த விவரங்களை மத்திய மின்துறை வெளியிட்டுள்ளது. தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தென் மாநிலங்களின் மொத்த மின் தேவை, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 62,274 மெகாவாட்டாக இருந்தது.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இது 76,747 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் தென் மாநிலங்களின் மின் தேவை 23.24 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு செப்டம்பர் மாதங்களில் மாநில வாரியாக பதிவான அதிகபட்ச மின் தேவை விவரம் வருமாறு:

மாநிலம் – 2025 செப்டம்பர் – 2026 செப்டம்பர் – அதிகரிப்பு

கர்நாடகம் – 14,486 – 20,094 – 38.71 சதவீதம்

தெலுங்கானா – 15,906 – 19,892 – 25 சதவீதம்

கேரளா – 4,467 – 5,440 – 21.80 சதவீதம்

ஆந்திரா –12,446 – 14,639 – 17.62 சதவீதம்

தமிழகம் –18,386 – 21,083 – 15 சதவீதம்

புதுச்சேரி – 506 – 546 – 7.85 சதவீதம்

மொத்தம் – 62,274 – 76,747 – 23.24 சதவீதம்

தென் மாநிலங்களில் கர்நாடகாவில் மின் தேவை அதிகபட்சமாக 38.71 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், தமிழகத்தில் 21,083 மெகாவாட்டாக மின் தேவை பதிவாகியுள்ளது.

த.வெ.க., உட்கட்சி பூசல்: நள்ளிரவில் பஞ்சாயத்து!

சென்னை, அக். 29–

த.வெ.க.,வை பலப்படுத்தவும், மக்களிடம் நற்பெயர் எடுக்கவும், இரவு பாடசாலை, பால், முட்டை, ரொட்டி திட்டம், இலவச காலை உணவு, பகல் உணவு திட்டங்களை செயல்படுத்தியதோடு, கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் கடுமை யாக உழைத்தனர். தற்போது, த.வெ.க., ஆட்சிக்கு வந்த பின், ஆட்சியிலும், கட்சியிலும், மாற்று கட்சியில் இருந்து வந்தவர்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இதனால், உட்கட்சி பூசலும் ஆங்காங்கே நடைபெறுகிறது.

உள்ளாட்சி தேர்தலில், 'சீட்' பெற, இப்போதே மாற்று கட்சியினர் பேரம் பேச துவங்கியுள்ளனர். இதற்காக, பணத்தை வாங்கி கொண்டு, பலருக்கும் பதவிக ளை, த.வெ.க., மாவட்ட செயலர்கள் வழங்கி வருகின்றனர். இதை கட்சி தலைமை கண்டுகொள்ளவில்லை. இதனால், அதிருப்தி அடைந்த த.வெ.க., நிர்வாகிகள், சாலை மறியலில் ஈடுபடும் அளவிற்கு நிலைமை மோசமாகி உள்ளது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கரூர், வேலுார், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகளை, சென்னை பனையூரில் உள்ள, த.வெ.க., தலைமை அலுவலகத்திற்கு அழைத்திருந்தனர். த.வெ.க., பொதுச்செயலரும், அமைச்சருமான ஆனந்த், இரவு 11:00 மணி முதல் நேற்று அதிகாலை 4:15 மணி வரை, அவர்களிடம் பேசி சமாதானம் செய்தார். 'உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ள சூழலில், உட்கட்சி பூசலில் ஈடுபடக்கூடாது' எனவும் அவர்களை கண்டித்தார். மேலும், 'கட்சிக்காக உழைத்த த.வெ.க.,வி னருக்கு, உள்ளாட்சி தேர்தலில் போ ட்டியிட, அதிகளவில் வாய்ப்பு வழங்க ப்படும்' என, ஆனந்த் உத்தரவாதம் அளித்துள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020